RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்-8 08 ஜனவரி புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## மன்மோகன் சிங், ஈவிகேஎஸ் மறைவுக்கு இரங்கல் சட்டப்பேரவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு

சென்னை, ஜன.8

சட்டப்பேரவை கூட்டத் தொடரின் 2ஆம் நாளான இன்று (ஜன.7) மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஈவிகேஎஸ் இளங்கோவன் ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தை சபாநாயகர் அப்பாவு வாசித்தார். பின்னர் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்கள் மவுன அஞ்சலி செலுத்திய பின்னர் அவை இன்றைக்கு நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.



முன்னதாக நேற்று இந்தாண்டு முதல் கூட்டத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசு தயாரித்து அளித்த உரையை வாசிக்காமல் புறக்கணித்து அவையில் இருந்து வெளியேறினார். "ஆளுநர் உரைக்கு முன்பாக தேசிய கீதம் பாடப்படாதது அல்லது இசைக்கப்படாதது இந்திய அரசியல் சாசனத்துக்கும் தேசிய கீதத்துக்கும் இழைக்கப்பட்ட அப்பட்டமான அவமரியாதை. இதைத் தொடர்ந்து மிகுந்த வேதனையுடன் பேரவையை விட்டு ஆளுநர் வெளியேறினார்." என்று ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்தது. இருப்பி னும் தமிழக அரசியல் கட்சிகள் பலவும் ஆளுநர் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப் பட்டது.

இந்நிலையில் இரண்டாவது நாளாக இன்று தமிழக சட்டப் பேரவை கூடியது. அவையில் மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஈவிகேஎஸ் இளங்கோவன் ஆகியோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பி னர்கள் மவுன அஞ்சலி செலுத் திய பின்னர் அவை இன் றைக்கு நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

## வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, ஜன.8

தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றுவதில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து, அக்கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு பல தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தாலும், நிறைவேற்றப்படாத பல முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென பெரும் எதிர்பார்ப்பு மக்களிடம் உள்ளது.



குறிப்பாக, சொத்துவரி உயர்வு, மின்கட்டண உயர்வுகளால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். சிறு குறு தொழில் முனைவோர்கள் மத்தியில் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ள மின்சார நிலைக் கட்டணத்தை திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

நீதிமன்ற தீர்ப்புகளை காரணம் காட்டி ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகளை அப்புறப் படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் போராடி வருகின்றனர். கோயில் நிலங்களில் குடியிருக்கும் மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

அதுபோல, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து, மின்சார ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ் வாறு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

டிச.18



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய சாலை மறியல் போராட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. தமிழக முதல்வர் அளித்துள்ள வாக்குறுதிகளில் ஒன்றான கடந்த கால வேலை நிறுத்த நாட்களை வரன்முறைப்படுத்துல்.கிராம ஊராட்சிகளை பேரூராட்சி மற்றும் நகராட்சிகளாக தரம் உயர்த்தும் நடவடிக்கைகளை ரத்து செய்தல், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளுடன் கிராம ஊராட்சிகளை இணைக்கும் நடவடிக்கைகளை முற்றிலுமாக கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.



மதுரை மாவட்டம் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வுமேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்

## துணைவேந்தர்கள் நியமனத்தில் புதிய விதிகள் மாநில உரிமைகளுக்கு எதிரான நேரடி தாக்குதல் முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை, ஜன.8

முதல்வர் ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில், "துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர்களுக்குப் பரந்த அதிகாரங்களை வழங்குவது மற்றும் கல்விப்புலம் சாராதோரும் துணைவேந்தோர் ஆகலாம் எனும் பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய விதிமுறைகள் கூட்டாட்சியியல் மற்றும் மாநில உரிமைகளுக்கு எதிரான நேரடித் தாக்குதல் ஆகும். மத்திய பாஜக அரசின் இந்த எதேச்சதிகார முடிவு அதிகாரக் குவியலுக்கு வழிவகுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைச் சிறுமைப்படுத்துவதாக உள்ளது. தன்னிச்சையாக இந்தப் புதிய விதிமுறைகள் தொடர்பான அறிவிக்கையை யுஜிசி வெளியிட்டது அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானதாகும். இந்த வரம்புமீறிய செயலை ஏற்கமுடியாது. இதற்கு எதிராக, சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராட்டத்தைத் தமிழகம் முன்னெடுக்கும்" என்று கூறியுள்ளார்.

## தமிழக ஆளுநரை கண்டித்து திமுக ஆர்ப்பாட்டம்: சென்னையில் திமுக எம்.பி., க்கள் உள்ளிட்டோர் பங்கேற்பு

சென்னை, ஜன.8

"ஆளுநருக்கு ஏன் அரசியல். ஆளுநர் அரசியல் பேச வேண்டிய தேவை, அவசியம், நியாயம் இல்லை. கேரளா, மணிப்பூர், பிஹார், உள்ளிட்ட மாநிலங்களில் எல்லாம் ஆளுநர் களை மாற்றிய மத்திய அரசே, தமிழகத்தில் மட்டும் ஏன் இவரை சாசனம் எழுதி வைத்தது போல மாற்றாமல் வைத்திருக்கிறது பாஜக" என்று திமுக எம்.பி. கனிமொழி கேள்வி எழுப்பினார்.





தமிழகத்தையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், மத்திய அரசின் ஏஜெண்ட்டாக தமிழகத்தின் உரிமைகளில் அத்துமீறல்களைச்செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், மத்திய அரசின் மீதுள்ள தமிழக மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் திமுக சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டி ருந்தது.

அதன்படி, தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., எம்.பி., க்கள் தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தென் சென்னை, வட சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட திமுக நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்தும், பாஜக மற்றும் அதிமுகவைக் கண்டித்தும் கண்டன முழக்கங்கள் எழுப்பப் பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி எம்.பி. பேசியதாவது: தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழகத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும். அவர் இருந்தால், பாஜகவின் வாக்கு சதவீதம் தமிழகத்தில் இறங்கும். எனவே, அவரை ஆளுநராக இங்கேயே வைத்துக் கொள்ளுங்கள் எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

ஆர்எஸ்எஸ் பாஜகவின் பரிமாணங்களோடு இருக்கக் கூடிய அந்த கோர முகத்தை தமிழர்களுக்கு ஒவ்வொரு நாளும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கக்கூடியவராக ஆளுநர் இருந்து வருகிறார். எனவே அவர் ஆளுநராக இருப்பதால் எங்களுக்கு பிரச்சினை இல்லை. உங்களது நன்மைக்காக சொல்கிறோம். கடைசியில் ஒரு வாக்கு கூட வாங்கக் கூடாத நிலைக்கு பாஜக வந்து விடக்கூடாது என்பதற்காகத் தான், ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறி வருகிறார்.

திமுகவும், தமிழக முதல்வர் ஸ்டாலினும் அரணாக நின்று தமிழக உரிமைகளை பாதுகாப் போம். ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் வந்து பிரச்சினையை கிளப்பி வருகிறார். ஆளுநர் பதவி என்பது ஒரு ரப்பர் ஸ்டாம்ப். எனவே நீங்கள் வீட்டில் இருங்கள். ஏதாவது திறப்பு விழாவுக்கோ, நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் செல்லுங்கள். என்ன பேச வேண்டும் என்பதை புரிந்துகொண்டு பேசுங்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு ஆளுநருக்கு ஏன் அரசியல். ஆளுநர் அரசியல் பேச வேண்டிய தேவை, அவசியம், நியாயம் இல்லை.

ஆனால், ஆளுநர் ரவி தொடர்ந்து அரசியல் பேசிக் கொண்டு, ஒவ்வொரு விஷயத்திலும் பிரச்சினையை கிளப்பிக் கொண்டு, தமிழக அரசை விமர்சித்துக் கொண்டிருக்கிறார். இதைவிட நல்லாட்சி இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், ஆளுநருக்கு திராவிட மாடல் ஆட்சி என்றாலே கஷ்டம். கடந்தமுறை திராவிட மாடல் என்ற வார்த்தையைக்கூட சொல்ல மறுத்தவர்தான் இந்த ஆளுநர்.

காரணம் பயம். திராவிடம் என்றாலே தூக்கத்திலும், கனவிலும் அவர்களுக்கு பயம் வருகிறது. மூன்றாவது ஆண்டாக நேற்று சட்டப்பேரவையில் இருந்து ஆளுநர் வெளியேறி சென்றிருக்கிறார். கேரளா, மணிப்பூர், பிஹார் உள்ளிட்ட மாநிலங்களில் எல்லாம் ஆளுநர்களை மாற்றிய மத்திய அரசே, தமிழகத்தில் மட்டும் ஏன் இவரை சாசனம் எழுதி வைத்தது போல மாற்றாமல் வைத்திருக்கிறது பாஜக," என்று கேள்வி எழுப்பினார்.

இதேபோல், திண்டுக்கல், மதுரை, கோவை, ஈரோடு, திருச்சி, நெல்லை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் திமுக சார்பில் ஆளுநரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

## சென்னை வாக்காளர் எண்ணிக்கை 40 லட்சமாக உயர்வு 63 ஆயிரம் வாக்காளர்கள் அதிகம்

சென்னை, ஜன.8

சென்னையில் நேற்று வெளியிடப்பட்ட சென்னை மாவட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி, வாக்காளர் எண்ணிக்கை 40 லட்சத்து 15 ஆயிரத்து 878 ஆக உயர்ந்துள்ளது.



சென்னை மாவட்டத்தில் 16 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இத்தொகுதிகளில் கடந்த அக்.29 முதல் நவ.28ம் தேதி வரை வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி நடைபெற்றது. பின்னர் இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன், ரிப்பன் மாளிகையில் நேற்று வெளியிட்டார். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடம் பட்டியலை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை வாக்காளர்களின் எண்ணிக்கை 40 லட்சத்து 15 ஆயிரத்து 878 ஆக உயர்ந்துள்ளது. ஆண் வாக்காளர்கள் 19 லட்சத்து 70 ஆயிரத்து 279 பேர், பெண் வாக்காளர்கள் 20 லட்சத்து 44 ஆயிரத்து 323 பேர், மூன்றாம் பாலினத்தினர் 1, 276 பேர் இடம்பெற்றுள்ளனர். கடந்த அக்.29ம் தேதி வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலுடன் ஒப்பிடும்போது சென்னையில் 63 ஆயிரத்து 380 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்.

குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 1 லட்சத்து 78 ஆயிரத்து 980 வாக்காளர்களும், அதிகபட்சமாக வேளச்சேரி தொகுதியில் 3 லட்சத்து 16 ஆயிரத்து 642 வாக்காளர்களும் உள்ளனர். வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் 96 ஆயிரத்து 504 நபர்கள், பெயர் சேர்த்தல் தொடர்பாக மனுக்கள் அளித்திருந்தனர். அவற்றின் மீது உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு, 96 ஆயிரத்து 184 வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள ஆய்வின்போது கண்டறியப்பட்ட இடம் பெயர்ந் தோர், காலமானோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்றோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்யக் கோரி பெறப்பட்ட 32 ஆயிரத்து 964 மனுக்களைப் பரிசீலனை செய்து 32 ஆயிரத்து 804 பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வில், திமுக மாநில சட்டத் துறை துணைச் செயலாளர் கே.சந்துரு, அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், பாஜக மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ்.கே.நவாஸ் உள்ளிட்டோர் பங்கேற்று இறுதி வாக்காளர் பட்டியலை பெற்றுக் கொண்டனர். கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ம.பிரதிவிராஜ், கட்டாரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) பி.சுரேஷ், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 2025 புத்தாண்டு நாளில் பிறந்த இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை

சென்னை, ஜன.8

2025 புத்தாண்டு நாளில் இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை பிறந்துள்ளது. ஜனவரி 1 ஆம் தேதி அதிகாலை 12.03 மணிக்கு பிறந்த பெண் குழந்தை இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை என்று அறியப்படுகிறது. மிசோரம் மாநிலம் அய்ஸ்வாலில் பிறந்த அந்தப் பெண் குழந்தைக்கு ஃப்ராங்கி ரெமுராடிகா ஜடேங் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. குழந்தை பிறக்கும்போது 3.12 கிலோ எடையுடன் ஆரோக்கியமாக இருந்ததாக மருத்துவமனை தெரிவித்துள்ளது. மகப்பேறு மருத்துவர் வன்லாகிமா குழந்தைப் பேறு அறுவை சிகிச்சை இன்றி இயல்பாக நடந்தது என்றும் தாயும் சேயும் நலம் என்றும் தெரிவித்துள்ளார்.

அதென்ன ஜென் பீட்டா குழந்தை? 'ஜென் பீட்டா' என்ற பதத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எதிர்காலஞ்சார் ஆராய்ச்சியாளர் மார்க் மெக் கிரிண்டில் உருவாக்கியுள்ளார். 2025 ஆம் ஆண்டு முதல் 2039 ஆன் ஆண்டு வரை பிறக்கும் குழந்தைகள் 'ஜென் பீட்டா' குழந்தைகள் என அழைக்கப்படுவார்கள் என்று அவர் கூறுகிறார். இவர்கள் மில்லனியல்ஸ் என்றழைக்கப் படும் ஜென் y அல்லது ஜென் z பெற்றோர்களுக்குப் பிறப்பவர்கள். 2035 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் உள்ள மக்கள் தொகையில் 16 சதவீதம் பேர் 'ஜென் பீட்டா' தலைமுறையினராக இருப்பார்கள். இவர்கள் பங்களிப்பு சர்வதேச சமூக, பொருளாதார சூழலில் முக்கியத்துவம் வகிக்கும் என்று மெக் கிரிண்டில் கணிக்கிறார்.



இவர்களைப் பற்றி மெக் கிரிண்டில் தனது வலைப் பக்கத்தில், "டிஜிட்டல் உலகமாக மாறி விட்ட இந்த புவியில் கல்வி, பணியிடம், பொழுதுபோக்கு என எல்லாவற்றிலும் செயற்கை தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் நிறைந்திருக்கும் காலத்தில் ஜென் பீட்டாவினர் வாழ்வர். இந்த தலைமுறையினர் இதுவரை இல்லாத அளவில் முற்றிலும் டிஜிட்டல் வாசிகளாகவே இருப்பர்.

2011 முதல் 2024 வரை பிறந்தோருக்கு ஜென் ஆல்ஃபா என்றும் 2025 முதல் 2039 ஆம் ஆண்டு வரை பிறப்போருக்கு ஜென் பீட்டா என்றும் கிரேக்க பதங்களை கொடுத்ததற்கு காரணம் இருக்கிறது. இவர்கள் முற்றிலும் மாறுபட்ட உலகில் வசிக்கக் கூடியவர்கள் என்பதால் கிரேக்க அகரமுதலியால் இவர்களைக் குறித்துள்ளேன். தொழில்நுட்பத்தோடு ஒருங்கிணைந்த வாழ்க்கையை வாழ்பவர்கள் ஆல்ஃபா, பீட்டா தலைமுறையினர்.

அதுவும் ஜென் பீட்டா தலைமுறை நாம் எப்படி வாழப்போகிறோம், எப்படி வேலை செய்யப் போகிறோம், எப்படி ஒருவொருக்கொருவர் பழகிக் கொள்ளப் போகிறோம் என எல்லாவற்றிலும் மாற்றத்தை, தாக்கத்தை ஏற்படுத்தும். புத்தாக்கம், புதிய தொழில்நுட்பத்துக்கும் தகவமைத்துக் கொள்ளுதல், மாறுபட்ட மாற்றத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம்." என்கிறார்.

## சிவகங்கை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் தேதி மாற்றம்

சிவகங்கை ஜன.8

10.01.2025 அன்று நடைபெற விருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நிர்வாக காரணங்களினால், வருகின்ற 09.01.2025 அன்று காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம், ஜனவரி 2025 இரண்டாம் வாரத்திற்கென வருகின்ற 10.01.2025 வெள்ளிக் கிழமை அன்று நடைபெற விருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், நிர்வாக காரணங்களினால் வருகின்ற 09.01.2025 (வியாழக்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



மேலூர் பகுதியில் வல்லாளப்பட்டி அரிட்டாபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் டங்ஸ்டன் திட்டம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாற்பதாயிரதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் மதுரை தல்லாகுளம் தபால் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்த சென்றனர். காவல் துறையினர் ஒரு சில இடங்களில் தடைகளை ஏற்படுத்தினர். அந்த தடையை மீறி பொதுமக்கள் நடைபயணத்தை மேற்கொண்டனர்.






சிவகங்கை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் "Traffic Rules" சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ பேரணியை முதன்மை மாவட்ட நீதிபதி அறிவொளி நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார போக்குவரத்து அலுவலர் மூக்கன், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் மாணிக்கம் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆட்டோ ஓட்டுனர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அருள்மிகு ஆலமரத்தடி ஆஞ்சநேயர் கோவிலில் தற்போது மார்கழி மாதம் என்பதால் தினசரி பூஜைகள் நடைபெறுகின்றன. நேற்று அதிகாலை அளவில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய கதவை திறந்த போது உண்டியல் காணாமல் போயிருந்தது அதைப் பார்த்த கோயில் நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். கோயிலில் பின்புற பகுதியில் உண்டியல் உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது பின்னர் காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் காலை நேரங்களில் சிவகங்கை செல்லும் அரசு பேருந்துகள் அதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரேக்குகளில் நிறுத்தப்படுவதில்லை ஓட்டுநர் மற்றும் நடத்துனரின் அலட்சியத்தால் மற்ற பேருந்துகள் செல்வதற்கும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையின் நடுவே நிறுத்தப்படுகிறது. ஒதுக்கப்பட்ட ரேக்குகளில் நிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா ?

## 2025ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கைக்கான விருதுக்கு விண்ணப்பிக்க சிவகங்கை ஆட்சியர் அழைப்பு

சிவகங்கை ஜன.8

சிவகங்கை மாவட்டம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி, திருநங்கைகள் தினம் கொண்டாடப்படுவதை அடுத்து, திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்து முன்மாதிரியாக திகழும் திருநங்கைகளை சிறப்பிக்கும் வகையில் "2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கைக்கான விருது" தமிழக முதலமைச்சரால் வழங்கப்பட உள்ளது.

இவ்விருதிற்கு, ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு இலட்சம்) பரிசுத் தொகைக்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படவுள்ளது. அதன்படி, விதிமுறைகளைப் பின்பற்றி தகுதியுடைய நபர்கள் http://awards.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.



இதில், தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளான, அரசாங்கத்தின் உதவி பெறாமல் தனது வாழ்க்கையை கட்டமைத்துக்கொண்ட திருநங்கைகளாக இருத்தல் வேண்டும். மேலும், திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்து, குறைந்தபட்சம் 5 திருநங்கைகள் தங்களது வாழ்வாதார ஆதரவைப் பெறவும், கண்ணியமான வாழ்க்கையை நடத்தவும் உதவிபுரிந்த திருநங்கைகளாக இருத்தல் வேண்டும். தமிழ்நாடு திருநங்கை நலவாரியத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது போன்ற விதிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பான விரிவான கருத்துருக்களை வருகின்ற 10.02.2025ஆம் தேதிக்குள், சிவகங்கை மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்கூறிய தகுதியிருப்பின் உரிய சான்றுகளோடு சிவகங்கை மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பதிவு செய்து, தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய அடையாள அட்டை பெற்றுள்ள திருநங்கையர் மற்றும் திருநம்பியர் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## கல்லல் விஷ்ராம் கல்வி அறிவாலய ஆண்டு விழா





கல்லல் ஜன.8

சிவகங்கை மாவட்டம் கல்லல் விஷ்ராம் கல்வி அறிவாலயத்தின் 17 வது ஆண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிவகங்கை தொல் நடைக்குழு நிறுவனர் புலவர் காளிராசா தலைமை விருந்தினராகவும், ஆசிரியை கிருஷ்ண வேணி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ் விழாவில் ஆசிரியர் பிரபு வரவேற்புரை வழங்கினார். மாணவி சந்தியா ஆண்டறிக்கையை வாசித்தார். பரிசளிப்பு நிகழ்ச்சியை ஆசிரியை சித்திரைச் செல்வி தொகுத்து வழங்கினார்.

சென்ற கல்வி ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பில் பள்ளி அளவில் முதலிடம் பிடித்த



நித்யஸ்ரீ, பதினோராம் வகுப்பில் முதலிடம் பிடித்த யோகேஷ், பத்தாம் வகுப்பில் இரண்டாம் இடம் பிடித்த சிவசங்கர், மூன்றாம் இடம் பிடித்த சுவேதா மற்றும் பள்ளி அளவில் உயர் மதிப்பெண் பெற்ற பதினோராம் வகுப்பு சத்யா, பத்தாம் வகுப்பு குரு நிகேதன், திவாகரன் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

கபடி, வாலிபால், கிரிக்கெட், கால்பந்து உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் வினாடி வினா, பேச்சு, கவிதை, ஓவியம், தமிழ் மற்றும் ஆங்கிலம் கையெழுத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் மிகச் சிறப்பான பங்களிப்பைக் கொடுத்து அதிகமான புள்ளிகளைப் பெற்ற பச்சை நிற அணிக்கு சுழற் கேடயம் வழங்கப்பட்டது.

இந்தக் கல்வியாண்டில் சிறந்த மாணவராக பன்னிரண்டாம் வகுப்பு மாணவர் சஞ்சயும், மிகச் சிறப்பான முறையில் படிக்கும் மாணவராக பத்தாம் வகுப்பு மாணவர் தினேஷும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவர்களின் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியை நாகரத்தினம் நன்றி கூறினார். ஆசிரியர்கள் முருகன், சத்தியமூர்த்தி ஆகியோருடன் திரளான மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மாணவிகள் விஜயலட்சுமி, டென்சி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

## கம்பம் அருகே கள்ளச்சாரயம் பறிமுதல்; இருவர் கைது

தேனி .ஜன.8

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள கருநாக்கமுத்தன் பட்டி பஞ்சாயத்து ஆபிஸ் தெருவில் கள்ளச்சாராயம் தயார் செய்வதாக உத்தமபாளையம் மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற மதுவிலக்கு போலீசார், ராஜா என்பவரது வீட்டில் சோதனை செய்த போது 30 லிட்டர் கள்ளச்சாராயம் தயார் செய்ததை உறுதி செய்த போலீசார் கள்ளச்சாராயத்தை பறிமுதல் செய்து ராஜா மற்றும் சிங்கதுரை என்ற இருவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். கள்ளச்சாராயம் காட்சி விற்பனை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.





சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும் ஆர்ச் பகுதியில் திருப்பத்தூர் செல்லும் சாலையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலகம் சங்கம் சார்பில் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.சாலை மறியலில் ஈடுபட்ட நபர்களை காவல்துறையினர் கைது செய்து வாகனத்தில் ஏற்றி சென்றனர்.

## அண்டார்ட்டிகா கண்டத்தில் சிகரத்தில் ஏறி சாதனை சென்னை திரும்பிய பெண்

### முத்தமிழ்செல்விக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

மீனம்பாக்கம் ஜன.8

விருதுநகர் ஜோகில்பட்டியை சேர்ந்த மலையேற்ற சாதனை பெண் சென்னை மண்ணிவாக்கத்தில் வசிக்கும் முத்தமிழ்செல்வி(34) இது வரை 5 உயரமான சிகரங்களில் ஏறி சாதனை செய்து இருந்தார். 6வது சாதனை பயணமாக அண்டார்டிக்காவில் உள்ள மவுண்ட் வில்சன் மலையில் 4892 மீட்டர் உயர சிகரத்தில் 58 கிலோ எடை கொண்ட பொருட்களுடன் ஏறி சாதனை புரிந்துள்ளர்.

மலையேற்ற சாதனை பெண்ணுக்கு செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட குழு தலைவர் படப்பை மனோகர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட முத்தமிழ் செல்விக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்து சால்வைகளை போர்த்தியும், மலர்கொத்துகளை கொடுத்து சாதனை பெண்ணை வரவேற்றனர்,



அப்போது செய்தியாளர்களிடம் பேசிய முத்தமிழ்செல்வி: உலகின் ஏழு கண்டங்களில் உள்ள உயரமான சிகங்களை அடைந்து சாதனை புரிய திட்டமிட்ட நிலையில் தற்போது 6வது சிகரத்தை அடைந்துள்ளேன்,

மிகவும் கடுமையான மைனஸ் 50 டிகிரி குளிர் கடும் காற்று, வானிலை சீராக இல்லாததால் மிகுந்த சிரம்மப்பட்டோம். விமானத்திற்காக 8 நாள் காத்திருந்தோம். கால நிலை மாற்ற விழிப்புணர்வுக்காக அண்டார்ட்டிகா சென்றேன்.

இதற்காக முதலமைச்சர் உதவி செய்தார். நிதி உதவி வழங்கினார்கள் அவர்களுக்கு நன்றி தெரிவித்துகொள்கிறேன்,

7வது சிகரம் வட அமெரிக்காவில் உள்ளது. மே மாதம் தான் செல்ல முடியும். இதை செய்த்தால் ஏழு கண்டங்களை ஏறி சாதனையை முழுமை செய்து விடுவேன். மலை உச்சியை தொட்டால் தான் சான்று பெற முடியும்.

வாழ்க்கையில் முய்ற்சி செய்து வெற்றி பெற்றால் தான் மகிழ்ச்சியாக இருக்கும். குறுக்கு வழியில் வெற்றி பெற கூடாது என்றார்.

# கீழக்கோட்டையில் வானவில் மன்ற கணித அறிவியல் ஆய்வுக்களுக்கான பயிற்சி



காளையார் கோவில் ஜன.8

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வானவில் மன்ற அறிவியல் மற்றும் கணித செய்முறை பயிற்சி நடைபெற்றது.

பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி கலிலியோ கலிலி வியாழன் கோளினை சுற்றி வந்த நான்கு நிலவுகளை தன்னுடைய தொலைநோக்கியை கொண்டு கண்டறிந்து அதற்கு கலிலியன் நிலவுகள் என்று பெயரிட்ட தினத்தை நினைவு கூர்ந்தார்.

வானவில் மன்ற கருத்தாளர் ஜெயபிரியா டிசம்பர் மாதத்திற்கான செய்முறைகளான முக்கோணங்களும் அதன் பண்புகளும் தாவர சாகுபடி கரைசலின் வகைகள் மின் துகள்களின் இடமாற்றம் பொருளின் எடையும் புவியீர்ப்பு முடுக்கமும் போன்ற எளிய ஆய்வுகளை செய்துகாட்டி மாணவர்களிடம் அறிவியல் ஆர்வத்தை தூண்டினார்.

மாணவி ஆஷா நன்றி கூறினார். மாணவர்கள் அறிவியல் ஆய்வுகளை ஆர்வமுடன் செய்துபார்த்தனர்.

# தேனி தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஆளுநரை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



சின்னமனூர், ஜன.8

தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டசபையில் தமிழ் தாய் வாழ்த்துக்கு முன்பு தேசிய கீதம் ஒலிக்கவில்லை என்று கூறி தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி சட்டசபையை விட்டு வெளியேறினார் இதை கண்டிக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் திமுக சார்பில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அந்த வகையில் தேனி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் மாநில தீர்மான குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கம்பம் இரா. பாண்டியன், தேனி தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்த், சின்னமனூர் நகர கழக செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, சின்னமனூர் நகர் மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு, ஓடைப்பட்டி பேரூர் கழக செயலாளர் கனகராஜ், உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், நேற்று 7.1.25 பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) கட்டுப்பாட்டில் உள்ள ஏரல் வட்டம் முக்காணி தடுப்பணையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர்களுக்கு தாட்கோ மூலமாக தொழிற்பயிற்சி



சிவகங்கை ஜன.8

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்கள் வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சியாளர் மற்றும் பிராட்பேண்ட் டெக்னிஷியன் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. மேலும், தொழில்நுட்ப பயிற்சியாளர் மற்றும் பிராட்பேண்ட் டெக்னிஷியன் பயிற்சியில் சேர்ந்து பயில பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி, தொழில் பயிற்சி (ITI), பட்டயம் படிப்பு (Diploma) மற்றும் ஏதேனும் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருத்தல் வேண்டும்.

மேலும், இப்பயிற்சியினை முடித்தவுடன் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம், வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ், பயன்பெற விருப்பமுள்ள நபர்கள் www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தின் வாயிலாக பதிவு செய்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# கடையநல்லூரில் பேரறிஞர் அண்ணாவை பற்றி தவறான கார்ட்டூன் வெளியிட்ட பத்திரிக்கையை தீ வைத்து எரித்து போராட்டம்



தென்காசி ஜன.8

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் பேரறிஞர் அண்ணாவைப் பற்றி கார்ட்டூன் படம் வெளியிட்ட ஆனந்த விகடன் பத்திரிகை எதிர்த்து போராட்டம் கடையநல்லூர் மணிக்கூண்டு அருகே உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத்தின் மாவட்டத் தலைவர் ஆ. ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் பேராசியர் மாரிஸ் செல்லத்துரை முன்னிலை வகித்தார் இதில் நகரத் தலைவர் குமந்தாபுரம் பழக்கடை ஈஸ்வரன், கடல், மன்ற பொருளாளர் செண்பகநல்லூர் கண்ணன், செங்கோட்டை பச்சை வேட்டி, முன்னாள் திமுக கவுன்சிலர் முகைதீன் பிள்ளை மன்ற ஒன்றியச்செயலாளர் அச்சன்புதூர் ஷாஜகான் மற்றும் மன்ற கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆனந்தவிகடன் பத்திரிக்கையை தீ வைத்து கொளுத்தினர் இது குறித்து கடையநல்லூர் காவல்துறை விசாரணை நடத்தி வருகிறது.

# ஆருத்ரா தரிசன திருவிழாவை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் - காவல் கண்காணிப்பாளர் ஆய்வுக் கூட்டம்



ராமநாதபுரம் ஜன.8

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருஉத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி கோயிலில் நடைபெறவுள்ள ஆருத்ரா தரிசன திருவிழாவை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ். முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கோயில் திருவிழாவையொட்டி வருகை தரும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் அமைத்து கொடுப்பது குறித்து ஆலோசனைகளை மேற்கொண்டதுடன் முக்கிய திருவிழா நாட்களான ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் அதிகளவு பொதுமக்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்துவிட்டு செல்வதையொட்டி ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் போதியளவு மின் விளக்குகள் அமைத்தல், தேவையான அளவு குடிநீர் வசதி அமைத்து கொடுத்தல் மற்றும் தற்காலிக கழிப்பறை கூடங்கள் அமைத்தல் போன்ற பணிகளை முன்னரே செயல்படுத்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் கூடுதலாக பேருந்துகள் இயக்கிட வேண்டும். அது மட்டுமின்றி கோவிலின் நான்கு பக்கங்களிலும் அறிவிப்பு பலகை வைத்து பேருந்துகளின் வழித்தடங்கள் குறித்த தகவல்களை தெரிவித்திட வேண்டும். பொது மக்களின் வருகைகேற்ப பேருந்துகளை இயக்கிய வண்ணம் இருந்திட வேண்டும்.

பொதுசுகாதார துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அளவிற்கு மருத்துவ முகாம்கள் அமைத்திட வேண்டும். மேலும் அவசரகால உறுதி வாகனங்கள் தயார் நிலையில் வைத்திட வேண்டும். மருத்துவர்கள் குழு சுழற்சி முறையில் பணியில் ஈடுபடு வதை உறுதி செய்திட வேண்டும்.

காவல்துறையின் மூலம் பொதுமக்கள் வருகை தரும் வாகனங்களின் நிறுத்துமிடங்களுக்குரிய அறிவிப்பு பலகையினை வைத்து உரிய வழிகாட்டுதலை செய்வதுடன், சாமி தரிசனம் செய்ய செல்லும் வழி, தரிசனம் முடித்து வெளியில் வரும் வழி மற்றும் பொதுமக்கள் பேருந்திற்கு செல்லும் வழித்தடம் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் சென்றிட ஏதுவாக விளம்பரப் பலகை வைத்து கண்காணித்திட வேண்டும்.

வருவாய்த்துறை, நகராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியத் துறை, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சிதுறையின் மூலம் கூடுதலாக பணியாளர்களை நியமித்து கோயில் பகுதியைச்சுற்றி தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் நாள்தோறும் கொசு மருந்து தெளித்து தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

திருக்கோயில் நிர்வாகம் மூலம் பொதுமக்கள் தரிசனம் செய்து சென்றிட ஏதுவாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை முன்கூட்டியே திட்டமிட்டு அமைத்து கண்காணித்து மிக நல்ல முறையில் திருவிழா சிறப்புடன் அமைந்திட வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் உதவி காவல் கண்காணிப்பாளர் தனுஷ் குமார்,, மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் இராஜ மனோகரன், கீழக்கரை துணை காவல் கண்காணிப்பாளர் கதிர்லால், தேவஸ்தான மேலாளர் (திவான்) பழனிக் குமார் பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தோவாளை ஊராட்சி ஒன்றியம் ஈசாந்தி மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வளர்ச்சி பணிகளை ஆட்சியர் ஆய்வு



கன்னியாகுமரி ஜன.8

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஈசாந்தி மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஈசாந்திமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தலா ரூ.3.10 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் 3 வீட்டுகளின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகளின் கட்டமைப்புகள், அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிகளுக்கு தேவையான சிமெண்ட், கம்பிகள் கொடுக்க துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டது. தொடர்ந்து கோமதி நாயகம் மேற்கொண்டு பணிகளை தொடர தேவையான வங்கி கடனுதவி பெற்று வழங்கிட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் இரண்டு பணியாளர்கள் தங்களுக்கான பணி நாட்கள் முடித்துவிட்டது. எனவே தங்களுக்கு பணி நாட்களை நீடித்து தரும்படி கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும் என தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் உதவி திட்ட அலுவலர் கார்த்திகேயன், உதவி பொறியாளர் ஹெலன் ராஜபாய், ஊராட்சி செயலர் ராஜா, மேற்பார்வையாளர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# தேனி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்



தேனி.ஜன.8

தேனிமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அன்று (06.01.2025) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 168 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி. ஷஜீவனா, பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார் இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 168 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக, சமூக நலத்துறையின் சார்பில் ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவியாக தனியார் பங்களிப்புடன் தலா 4 கிராம் தங்கம் 3 பெண்களுக்கும் தேனி அல்லிநகரம் நகராட்சியின் சார்பில் 2 தூய்மை பணியாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் மதிப்பிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவகாப்பீடு அட்டையினையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அகமலை ஊராட்சி மருதையூர் கிராமத்தை சேர்ந்த 6 பழங்குடியினர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அடையாள அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.16,199 மதிப்பிலான ஸ்மார்ட்போன் 12 நபர்களுக்கும், தலா ரூ.1,05,000/ மதிப்பிலான பேட்டரி வீல்சேர் 2 நபர்களுக்கும் என மொத்தம் 25 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த விற்பனையாளர்களுக்கு முதல் பரிசாக ரூ.4,000/ இரண்டாம் பரிசாக ரூ.3000 மற்றும் சிறந்த எடையாளர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000/ இரண்டாம் பரிசாக ரூ.2000மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அபிதா ஹனீப், பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முத்து மாத வன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயணி, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .வெங்கடாச்சலம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சசிகலா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேவி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழனியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்தநாளை முன்னிட்டு ஆயக்குடி திமுக சார்பில் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



பழனி ஜன.8

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆயக்குடியில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சரும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான ஐ.பெரியசாமி பிறந்தநாளை முன்னிட்டு பழனியில் பல்வேறு இடங்களிலும் திமுக சார்பில் நிர்வாகிகள் அன்னதானம், இனிப்பு வழங்குதல் என பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர்.

ஆயக்குடியில் ஆயக்குடி பேரூர் கழகம் சார்பில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்தநாளை முன்னிட்டு ஆயக்குடி பேரூர் கழக அலுவலகம் முன்பு பழனி ஒன்றிய செயலாளர் சாமிநாதன் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு பேரூர் செயலா ளர் சின்னத்துரை தலைமை வகித்தார். முன்னதாக பட்டாசு வெடிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒன்றிய செயலாளர் சாமிநாதன் வரவுள்ள தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் வெற்றிவாகை சூடும் வகையில் ஒன்றிய அளவிலும், ஆயக்குடி பேரூர் அளவிலும் பணிகள் செய்ய திமுகவினர் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.



கன்னியாகுமரிதமிழக ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், வளர்ச்சி துறை ஊழியர் மீது திணிக்கப்படும் பிற துறைப் பணிகளை முற்றிலும் கைவிட வேண்டும் உள்ளிட்ட 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஆட்சியர் அலுவலகத்தில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் நாகர்கோவில் உள்ள குமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் மற்றும் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதில் 100 க்கும் மேற்பட்டார் கைது செய்யப்பட்டனர்.

## மதுரை மாவட்ட பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு



மதுரை, ஜன.8

மதுரை மாவட்ட பொதுப் பணித்துறை ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக் கப்பட்டது.

இம்மனு வில் மதுரை மாவட் டத்தைச் சுற்றியுள்ள கல்குவாரி மற்றும் கிரசர் உரிமையாளர்கள் அடிக்கடி ஜல்லி எம்சாண்ட் போன்றவற்றை கட்டுப்பாடு இல்லாமல் விலை ஏற்றம் செய்வதால் தற்போது நடை பெற்றுள்ள ஒப்பந்த புள்ளிகளில் கிடைக்கப்பெற்ற அரசு மருத் துவமனை அரசு பள்ளி கட்டிடங் களுக்கு மற்றும் அலுவலக கட்டிடங்களுக்கு வேலை செய்ய மிகவும் சிரமமாக இருக்கிறது எனவே பழைய விலைக்கே கிரஷர் உரிமையாளர்கள் இருந்து ஒப்பந்தக்காரர்களுக்கு கிடைக்கும் வழியில் வகை செய்ய வேண்டும் என குறிப் பிட்டனர்.

இந்நிகழ்வில் சங்கத் தலைவர் நாகராஜன் செயலாளர் முருகன், பொருளாளர் கணேசன் துணைத் தலைவர் ஆறுமுகம் துணை செயலாளர் ராஜகோபால் துணைப் பொருளாளர் பிரபு ஆகியோர் மற்றும் பல்வேறு ஒப்பந் ததாரர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசியில் தெற்குமாவட்ட திமுக சார்பில் ஆளுநரை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், பூங்கோதை ஆலடி அருணா, தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் கனிமொழி மற்றும் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் குதிரை மொழி கிராமத்தில் உள்ள தேரி காட்டினை மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வனச்சரகர் அலுவலர் கவின், வனவர் .நாகராஜ் ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணன், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ஆட்சியர் அலுவலகத்தில், வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில், சிறப்பு சுருக்கத் திருத்தம் 2025, இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர் முன்னிலையில் வெளியிட்டார். இந்நிகழ்வின்போது வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், தேர்தல் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தென்காசி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் மாணவர்களுக்கு திறன் வளர் போட்டிகள்! மாவட்ட ஆட்சியர் தகவல்

தென்காசி ஜன.8

தென்காசி மாவட்டம் பள்ளி / கல்லூரி மாணவர்களிடையே பேச்சாற்றாலையும், படைப் பாற்றாலையும் வளர்க்கும் நோக்கில் தென்காசி மாவட்டத் தில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பள்ளி மாணவ / மாணவிகளுக்கும், அனைத்து கல்லூரி மாணவ/ மாணவிகளுக்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடத்தப்பெற்று பரிசுகள் (ம) பாராட்டுச் சான்றிதழ்கள் வழங் கப்பெற உள்ளன.




தென்காசி மாவட்டத்தில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்துபள்ளிமாணவ/ மாண விகளுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் 21.01.2025 அன்று காலை 9 மணிக்கும், அனைத்து கல்லூரி மாணவ/ மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் 22.01.2025 அன்று காலை 9.00 மணிக்கும் தென்காசி இ சி ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பெற உள் ளது. இப்போட்டிகளில் தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளி மாணவ / மாணவிகளும் அனைத்து கல்லூரிமாணவ/மாணவிகளும் கலந்து கொள்ளலாம்.

ஒருபள்ளியிலிருந்துஒருபோட் டிக்கு இரண்டு மாணவ/ மாண விகள் வீதம் மூன்று போட்டிக ளுக்கு 06 மாணவ/ மாணவிகள் கலந்து கொள்ளலாம். போட்டி களில் கலந்து கொள்ளும் மாணவ/ மாணவிகள் தங்கள் பள்ளி தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் உரிய படிவத் தினை நிறைவு செய்து இப்போட் டிகள் நடைபெறும் நாளில் அளிக்கப்பெற வேண்டும்.

கல்லூரியிலிருந்து ஒரு போட்டிக்கு இரண்டு மாணவ/ மாணவிகள் வீதம் மூன்று போட்டிகளுக்கு 06 மாணவ / மாணவிகள் கலந்து கொள்ள லாம். போட்டிகளில் கலந்து கொள்ளும்மாணவ/மாணவிகள் தங்கள் கல்லூரி முதல்வரின் பரிந்துரையுடன் உரிய படிவத் தினை நிறைவு செய்து இப்போட் டிகள் நடைபெறும் நாளில் அளிக் கப்பெற வேண்டும். போட்டிக ளுக்கான தலைப்புகள் போட் டிகள் தொடங்கும் முன்பு நடு வர்கள் முன்னிலையில் அறிவிக் கப்பெறும். பேச்சுப் போட்டிக் கான தலைப்புகள் குலுக்கல் முறையில் வழங்கப் பெறும்.

தென்காசி மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி / கல்லூரி மாணவ/ மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ.10,000/, இரண்டாம் பரிசு ரூ.7,000/, மூன்றாம் பரிசு ரூ.5,000/ வழங்கப்பெறும்.

மேலும் விவரங்களுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மணி முத்தாறு வளாகத்தில் செயற் பட்டு வரும் மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண் 0462 2502521)தென்காசி மாவட்டத் தில் பள்ளி / கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவிகள் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித் துள்ளார்.

## தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பாரம்பரிய மூலிகை மருந்துகளின் உருவாக்கம் - வளர்ச்சி பயிலரங்கம்

தேனி, ஜன.8

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட தேனி மாவட்டம் வட புதுப்பட்டியில் தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேதியியல் துறை சார்பில் "பாரம்பரிய மூலிகை மருந்துகளின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி" என்ற தலைப் பில் இரண்டு நாள் பயிலரங்கம் இரண்டு நாட்கள் நடைபெற்றது.



வேதியியல் துறையின் தலைவர் முனைவர் தேவி மீனாட்சி வரவேற்புரையாற் றினார். தேனி மேலப்பேட்டை இந்துநாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ், பொதுச் செயலாளர் ஆனந்தவேல், மற்றும் பொரு ளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி செய லாளர் காசிபிரபு துவக்க உரை யாற்றினார். கல்லூரியின் இணைச் செயலாளர்கள் செண் பகராஜன், அருண், கல்லூரி முதல்வர், முனைவர் சித்ரா, கல்லூரி அகடமிக் டீன் முனைவர் கோமதி, கல்லூரி சிஓஇ முனைவர். சரண்யா, துணை முதல்வர்கள் சுசிலா சங்கர், முனைவர் உமாகாந்தி, முனைவர் கிருஷ்ணவேணி, மற்றும் விடுதி காப்பாளர் உமா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக தேனி சித்த மருத்துவ கூடுதல் மருத்துவ அலுவலர் மருத்துவர் சங்கரராஜ், தேனி அரசு மருத் துவமனை பார்மாகோ விஜி லென்ஸ் மையத்தின் ஜேஆர்ப் மருத்துவர் கார்த்திக் ராஜா, போடி அர்னவ் ஹோமியோபதி மருத்துவமனை மருத்துவர் வினோதினி ஆகியோர் கலந்து கொண்டு இன்றைய நவீன உலகில் சித்த மருத்துவம் என்பது இன்றியமையாதது. சித்த மருத்துவம் என்பது கர்ப்பப்பையை வலுவூட்டும், உடல் வலி, தலைவலி, மூச்சு திணறல் போன்றவைகளை இயற்கை முறையில் குணப்படுத் தலாம். அதேபோல் கடுக்காய் இஞ்சி, சுக்கு, மிளகு, கடுக்காய் போன்றவைகளை அடிக்கடி உணவாக எடுத்துக்கொண்டால் நோய்நொடி இல்லாமல் நீண்ட நாட்கள் உடல் ஆரோக்கியத் துடன் வாழலாம் என்று பேசினர். பாரம்பரிய சித்த மருத்துவ முறையை செயல்முறை பயிற் சியை மாணவிகளுக்கு விளக் கினர். இந்த இரண்டு நாள் பயி லரங்கத்தில் 9 பேராசிரியர்கள், 110 மாணவிகள் கலந்து கொண் டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் வேதி யியல் துறையின் ஒருங்கிணைப் பாளர் சித்ரா தேவி நன்றி கூறினார்.

## தூத்துக்குடி மாவட்டம் ஏரலில் புதிதாக துவக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்கள் நேரடி சேர்கை நீட்டிப்பு

தூத்துக்குடி ஜன.8

தூத்துக்குடி மாவட்டம் ஏரலில் புதிதாக துவக்கப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2024ஆம் ஆண்டுக்கான பயிற்சி யாளர்கள் நேரடி சேர்க்கை மேற்கொள்ள 31.12.2024 வரை கால அவகாசம் வழங்கப் பட்ட நிலையில், தற்போது 31.01.2025 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது



கல்வித்தகுதி எட்டாம் வகுப்பு/ பத்தாம் வகுப்பு/2021ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பின் ஒன்பதாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்.

விண்ணப்பக்கட்டணம்: விண் ணப்பக் கட்டணம் ரூ.50/ மட்டுமே. ஏரல் அரசு தொழிற் பயிற்சிநிலையத்திற்கு விண்ணப் பிக்க விரும்புவோர் 8 ஆம் வகுப்பு/பத்தாம் வகுப்பு மதிப் பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் ஒரு நகல்களுடன் திருச்செந்தூர் அரசு தொழிற்ப யிற்சி நிலையத்திற்கு நேரில் சென்று விண்ணப்பித்து உடன் சேர்க்கையினை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், ஏரல் அரசு தொழிற் பயிற்சி நிலைய சேர்க்கை தொடர்பாக கீழ்க்காணும் அலை பேசி எண்ணில் தொடர்பு கொள் ளவும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

99525 56469, 94882 01582, 94990 55813, 94990 55812 மேலும் ஏரல் அரசு தொழிற்பயிற்சி நிலை யத்தில் சேரும் மாணவ, மாணவி களுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா பாடப்புத்தகங்கள், வரைபடக்கருவிகள், சீருடை, காலணி, பயிற்சிக்குத் தேவை யான உபகரணங்கள், கட்டண மில்லா பஸ் பாஸ், இலவச சைக்கிள், வழங்கப்படும். மேலும் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் வருகைக்கேற்ப உதவித்தொகை .ரூ.750/, மற்றும் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் கீழ் தகுதியுள்ள மாணவமாணவி களுக்கு மாதம் ரூ.1000/ கூடுதல் உதவித்தொகையும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரி வித்துள்ளார்.

## பல்லாவரத்தில் ஆளுநரை கண்டித்து திமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

பல்லாவரம் ஜன.8

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தமிழ்த்தாய் வாழ்த்தும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஒன்றிய அரசின் ஏஜெண்டாக தமிழ்நாட்டில் உரிமைகளில் அத்துமீறல்களை செய்யும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து ஒன்றிய அரசின் மீது உள்ள தமிழ்நாடு மக்களின் கோபத்தை திசை மாற்று யுத்தங்களை செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணி கண்டித்தும் பல்லா வரம் பேருந்து நிலைய அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




பல்லாவரம் எம்எல்ஏ கருணா நிதி தலைமையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா வரவேற்பிலும் மாவட்ட அவை தலைவர் துரைசாமி, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப் பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட துணைச் செயலாளர் மூர்த்தி, மாவட்ட பொருளாளர் விசுவநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் ஆர்ப்பாட் டத்தில் முன்னாள் எம்எல்ஏ வைத்தியலிங்கம், தமிழ்மணி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், காஞ்சிபுரம் மாவட்ட குழு தலைவர் படப்பை மனோகரன், மண்டல குழு தலைவர்கள் வே.கருணாநிதி, டி.காமராஜ் ஆலந்தூர் சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் அன்பு செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பகுதி செயலாளர்கள் திருநீர்மலை ஜெயக்குமார், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், ஒன்றிய செயலா ளர்கள் இதயவர்மன், பூவரச பட்டு ஜிகே ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகி ராமன், தாம்பரம் மாநகர துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார், இன்சமாம், கார்த்திக், மாமன்ற உறுப்பினர்கள் மகளிர் அணியினர் உட்பட 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தமிழக அரசு ஆளுநர் மற்றும் பாஜக அரசு கண்டித்து கோஷங் களை எழுப்பினார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161